மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை – 2025

வணிகமும் கணக்கீட்டு கல்வியும்
Business Studies & Accounting

மூன்று மணித்தியாலம்

தரம் - 11

60 T I,II

சுட்டெண்:…………………………….....

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

❖ வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

கவனிக்க:-

I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

❖ ***பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 – 5 வரையான வினாக்களிற்கு விடையளிக்குக.***

பெண்களுக்கான ஆடை வடிவமைப்புத் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்த ரமீனா, பிரதான நகரில் பல அரச அலுவலகங்கள் காணப்படும் இடத்திற்கு அண்மையில் கட்டிடம் ஒன்றை வாடகைக்குப் பெற்று "மீனா தையலகம்" என்ற பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார்.
இவர் இணையம் மூலம் பல்வேறு ஆடை வடிவமைப்புக்களை பெற்று வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப ஆடைகளை வடிவமைப்பதுடன் தனக்குத் தேவையான மூலப்பொருட்களை கொழும்பிலிருந்து மொத்த விற்பனை செய்யும் வணிகர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றார்.

1. மேற் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்தில் "மீனா தையலகம்" மூலம் நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?
   (1) வீடு (2) ஆடை (3) பாதுகாப்பு (4) ஆரோக்கியம்

2. இச் சம்பவத்தில் குறிப்பிட்டுள்ள மீனா தையலகம்,
   (1) ஒரு பங்குடைமையாகும். (2) ஒரு தனியுரிமை வியாபாரமாகும்.
   (3) ஒரு கூட்டுறவு சங்கமாகும். (4) ஒரு கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகும்.

3. "மீனா தையலகம் " வணிகத்தின் பலமாக அமைவது
   (1) வணிகம் பிரதான நகர்புறத்தில் அமைந்துள்ளமை.
   (2) இணையத்தில் பல்வேறுபட்ட ஆடைவடிவமைப்புக்களை பெறமுடிதல்
   (3) ரமீனா ஆடை வடிவமைப்புத்துறையில் டிப்ளோமா பெற்றவராகக் காணப்படல்
   (4) அரச அலுவலகங்களுக்கு அருகில் காணப்படுகின்றமை

4. மேற்கூறிய சம்பவ கற்கையுடன் தொடர்புபடாத அக்கறை செலுத்தும் தரப்பினராகக் கருதப்படக் கூடியவர்
   (1) உரிமையாளர் (2) வாடிக்கையாளர் (3) அரசு (4) வழங்குநர்

5. இந்த வணிகத்தில் காணக்கூடிய ஒரு அனுகூலமாகக் கருதக் கூடியது
   (1) பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள தன்மை
   (2) சட்ட ஆளுமையைக் கொண்டிருத்தல்
   (3) நிலைத்திருக்கும் தன்மையைக் கொண்டிருத்தல்
   (4) ஆரம்பிப்பது இலகுவாக இருத்தல்

❖ பின்வரும் தகவலைப் பயன்படுத்தி 6, 7, 8 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

பிரபல சவர்கார உற்பத்தி நிறுவனமான 'ஸ்ரார்' கம்பனியானது புதிதாக சந்தையில் நுழைந்த 'ஸ்மார்ட்' சவர்காரத்தினால் பிரச்சினையை எதிர்நோக்கியது. இதனால் ஸ்ரார் கம்பனியானது தனது சவர்காரத்தின் தரம், வாசனை, வடிவமைப்புத் தொடர்பில் **மாற்றங்களை செய்ய தீர்மானித்தது.**

6. 'ஸ்ரார்' கம்பனி மீது தாக்கம் செலுத்தும் புறச்சூழல் காரணி எது?
   (1) வழங்குநர்கள் (2) போட்டியாளர்கள் (3) முகாமையாளர்கள் (4) ஊழியர்கள்

7. இச் சம்பவத்தில் இனங்காணக் கூடிய சந்தைப்படுத்தல் கலவை மாறி எது?
(1) உற்பத்திப்பொருள் (2) விலை (3) இடம் (4) மேம்படுத்தல்

8. மேற்கூறிய சம்பவத்தில் தடித்த எழுத்தினால் இனங்காட்டப்படும் முகாமைத்துவக் கருமமாக அமைவது
(1) ஒழுங்கமைத்தல் (2) கட்டுப்படுத்தல் (3) நெறிப்படுத்தல் (4) திட்டமிடல்

9. ஜனநாயக கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்படும் வணிக நிறுவனம் எது?
(1) கூட்டுறவு (2) தனியுரிமை வணிகம் (4) பங்குடைமை வணிகம் (4) அரச கம்பனி

10. நடைமுறை வைப்புடன் தொடர்புடைய சில கூற்றுக்கள் வருமாறு,
A. காசோலை மூலமாக கொடுக்கல் வாங்கல் செய்தல்.
B. வைப்பிலுள்ள பணத்திற்கு வட்டி பெறுதல்
C. மேலதிகப்பற்று வசதிகள் கிடைத்தல்.
மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் மிகச்சரியான கூற்றுக்களை மட்டும் கொண்ட தொகுதி,
(1) A, B (2) B, C (3) A, C (4) A, B மற்றும் C

11. காசோலை ஒன்றுடன் தொடர்புடைய இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றது.
A. காசோலை மூலமான கொடுக்கல் வாங்கல்களுக்கு வணிகவங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்க வேண்டும்.
B. குறுக்கு கோடிட்ட காசோலையை வங்கி கருமபீடத்தில் பணமாக மாற்ற முடியாது.
மேலே தரப்பட்ட கூற்றுக்கள் தொடர்பில் சரியான விடையைத் தெரிவு செய்க.
(1) A மட்டும் உண்மையானதாகும்.
(2) B மட்டும் உண்மையானதாகும்
(3) A. B ஆகிய இரண்டும் உண்மையானதாகும்.
(4) A, B ஆகிய இரண்டும் பொய்யானதாகும்.

12. தற்போது இலங்கையில் வாகன இறக்குமதிக்கான தடை நீக்கப்பட்டமையின் காரணமாக மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் வாகனங்களின் பாவனை அதிகரித்துள்ளது.
மேற்கூறிய கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் போக்குவரத்தின் மூலங்களாகக் கருதுப்படுபவை
(1) ஊடகம், பாதை (2) வலு (சக்தி), ஊடகம்
(3) தரிப்பிடம், பாதை (4) ஊடகம், தரிப்பிடம்

13. காப்புறுத்துவோன் என்பது காப்புறுதியில் எதனைக் குறிக்கும்?
(1) இழப்பீட்டினைப் பெறுபவர்
(2) காப்புறுதி ஒப்பந்தத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய மூன்றாம் தரப்பினர்
(3) இழப்பீட்டுத் தொகையை வழங்கும் தரப்பினர்
(4) காப்புறுதி ஒப்பந்தத்தில் தொடர்புபடும் அனைத்து தரப்பினரும்

14. தொடர்பாடல் செயன்முறை கீழே தரப்படுகின்றது.



மேலே A, B, C எழுத்துக்களால் குறிக்கப்படுபவை முறையே
(1) பெறுநர், செய்தி, துலங்கல் (2) துலங்கல், பெறுநர், செய்தி
(3) செய்தி, பெறுநர், துலங்கல் (4) செய்தி, பெறுநர், துலங்கல்

15. வியாபாரம் தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றாகக் கருதக்கூடியது?
(1) இறுதி பாவனைக்காக பொருட்களை விற்பனை செய்தல் சில்லறை வியாபாரமாகும்.
(2) இடைநடுவர்கள் காணப்படுவதால் முடிவு பொருளின் விலையானது ஒப்பீட்டளவில் உயர்வாகவுள்ளது.
(3) ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் பொருட்கள் விற்பனை செய்தல் வெளிநாட்டு வியாபாரம் ஆகும்.
(4) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போன்றன சர்வதேச வர்த்தகத்தின் பிரிவுகளாகும்.

16. மாயா தான் சேமித்து வைத்த பணத்தினை பயனுள்ள வழியில் முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளார். அவரது முதலீட்டுத் தேர்விற்கான காரணிகள் வருமாறு.
1. முதலீட்டிற்கான முழுப்பாதுகாப்பு கிடைத்தல்
2. இடர்குறைவு
3. மூன்று மாதத்துக்குள் முதலீட்டுப் பணத்தைத் திருப்பிப்பெறலாம்.
மாயாவிற்கு பொருத்தமான முதலீட்டினை தெரிவு செய்க.
(1) சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்தல்
(2) திறைசேரி உண்டியலைக் கொள்வனவு செய்தல்
(3) சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்
(4) சேமிப்புக் கணக்கில் பணத்தை வைப்புச்செய்தல்

17. கீழே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுள் சொத்து, உரிமை மற்றும் பொறுப்புக்களில் தாக்கம் செலுத்தக் கூடிய கொடுக்கல்வாங்கலைத் தெரிவு செய்க.
(1) உரிமையாளர் ரூபா 5000 ஐ தனது சொந்தத் தேவைக்காகப் பற்றினார்.
(2) கடன்கொடுத்தோனுக்கு ரூபா 15000 கொடுத்துத் தீர்க்கப்பட்டது.
(3) வங்கிக்கடன்வட்டி ரூபா 6000 உட்பட ரூபா 50000 வங்கித் தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது.
(4) கடன்பட்டோரிடமிருந்து ரூபா 5000 பெறப்பட்டது.

18. சங்கீதா வணிகத்தில் 2024 இல் உள்ள சில தகவல்கள் பின்வருமாறு
01.01.2024 இல் மூலதனம் ரூபா 300, 000
வருமானங்கள் ரூபா 100, 000
31.12.2024 இல் உரிமையாண்மை ரூபா 325, 000
சங்கீதா 2024 இல் எடுப்பனவு ஏதும் செய்யவில்லை. 2024 இல் அவரது செலவினங்கள்,
(1) ரூபா 25 000 (2) ரூபா 75 000 (3) ரூபா 300 000 (4) ரூபா 725 000

19. செலவு அதிகரிக்கின்ற வரவு குறைக்கின்ற இரட்டைப்பதிவை கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) மின்சாரக் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு
(2) கட்டடக் கணக்கு, வங்கிக் கடன் கணக்கு
(3) வங்கிக்கடன் கணக்கு, கடன் கொடுத்தோர் கணக்கு
(4) பெற்ற தரகு கணக்கு, காப்புறுதி கணக்கு

20. காயா வணிகத்தின் 2024.12.31ல் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட மீதிகள்.
- மூலதனம் ரூபா 500000 (01.01.2024 இல்)
- விற்பனை வருமானம் ரூபா 100000
- தரகு வருமானம் ரூபா 25000
- வருடத்திற்கான செலவுகள் ரூபா 50000
- பற்று ரூபா 10000

2024.12.31ல் காயா வணிகத்தின் உரிமையாண்மை யாது?
(1) ரூபா 550000 (2) ரூபா 565000 (3) ரூபா 590000 (4) ரூபா 625000

➢ தரப்பட்டுள்ள தகவலைக் கொண்டு வினா 22 மற்றும் 23 ஆகியவற்றிற்கு விடை தருக.
A. காசு அடிப்படையில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது ரூபா 40 000
B. வணிகப் பாவனைக்கு தேவையான உபகரணங்கள் ரூபா 75 000 இற்கு றியாஸிடமிருந்து கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

21. கொடுக்கல் வாங்கல் A இற்கான இரட்டைப் பதிவு,
(1) காசுக் கணக்கு - வரவு - ரூ.40000
விற்பனை கணக்கு - செலவு - ரூ.40000
(2) காசுக் கணக்கு - வரவு - ரூ.40000
இருப்பு கணக்கு - செலவு - ரூ.40000
(3) விற்பனை கணக்கு - வரவு - ரூ.40000
இருப்பு கணக்கு - செலவு - ரூ.40000
(4) இருப்பு கணக்கு - வரவு - ரூ.40000
விற்பனை கணக்கு - செலவு - ரூ.40000

22. கொடுக்கல் வாங்கல் B யை பதிவு செய்வதற்கான மூல ஆவணம் மற்றும் முதன்மை ஏடு,
   (1) நாட்குறிப்பு கைச்சாத்து, பொது நாட்குறிப்பு
   (2) கொள்வனவு பட்டியல், கொள்வனவு நாட்குறிப்பு
   (3) பொது நாட்குறிப்பு, கொள்வனவு பட்டியல்
   (4) கொள்வனவு நாட்குறிப்பு, நாட்குறிப்பு கைச்சாத்து

23. பாண் உற்பத்தி செய்யும் பேக்கரி உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக 10 இறாத்தல் பாணை எடுத்தார். இதனை பதிவு செய்வதற்கான முதன்மை ஏடு எது?
   (1) பொது நாட்குறிப்பு (2) கொள்வனவு நாட்குறிப்பு
   (3) விற்பனை நாட்குறிப்பு (4) சில்லறைக் காசேடு

24. கொள்வனவு பட்டியலில் உள்ள விற்பனை விபரம் பின்வருமாறு,
   5/40 தேறிய 90
   5% கழிவு பெறுவதற்கு பணம் செலுத்த வேண்டியது,
   (1) 90வது நாள் அல்லது அதற்கு முன்னர்
   (2) 40 வது நாள் அல்லது அதற்கு முன்னர்
   (3) 40 தொடக்கம் 90 நாட்களுக்குள்
   (4) 50 நாட்களுக்குள்

25. வணிகமொன்றின் வங்கிக் கணக்கு மீதி ரூபா 15,500 ஆகவும், வங்கிக்கூற்று மீதி ரூபா 16,000 ஆகவும் காணப்பட்டது. இவ்வேறுபாட்டுக்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்கலைத் தெரிவுசெய்க.
   (1) வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூபா 500.
   (2) வங்கிக்கு நேரடியாகக்கிடைத்த முதலீட்டு வருமானம் ரூபா 500.
   (3) நிலையான கட்டளையின் பேரில் வங்கி செலுத்திய காப்புறுதிக்கட்டணம் ரூபா 500.
   (4) வங்கியில் வைப்புச்செய்தும் தீர்வையாகாத காசோலை ரூபா 500.

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா இல 26 மற்றும் வினா இல 27 ஆகியவற்றிற்கு விடையளிக்க.
   வணிகமொன்றின் கணக்கேடுகளில் மின்கட்டணக் கொடுப்பனவு ரூ 5700 பதிவுசெய்யப்பட்டுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது.
   மின் கட்டணக் கணக்கு - வரவு ரூ. 7500
   காசுக் கணக்கு - செலவு ரூ 7500

26. மேலே காட்டப்பட்டுள்ள பதிவு வெளிப்படுத்துவது
   (1) தொங்கற் கணக்கு வரவு மீதி ரூ 1800 ஆகக் காணப்படும்
   (2) மின்கட்டணம் தொடர்புடைய கணக்குகளில் ரூ 1800 ஆல் அதிகமாக பதிவு செய்யபட்டுள்ளது.
   (3) பரீட்சை மீதியின் வரவு மற்றும் செலவு நிரல்களின் கூட்டுத்தொகை சமமாக இல்லை.
   (4) மின்கட்டணம், கணக்குகளில் தவறான பக்கங்களில் ரூ 1800 ஆல் அதிகமாகவும் பதியப்பட்டுள்ளது.

27. மேலே காட்டப்பட்டுள்ள வழுவை திருத்துவதற்கான சரியான இரட்டைப் பதிவு,

(1)	காசுக் கணக்கு -	வரவு -	ரூ 1800
	மின்கட்டணக் கணக்கு-	செலவு -	ரூ 1800
(2)	மின்கட்டணக் கணக்கு -	வரவு -	ரூ 1800
	காசுக் கணக்கு -	செலவு -	ரூ 1800
(3)	மின்கட்டணக் கணக்கு -	வரவு -	ரூ 5700
	காசுக் கணக்கு -	செலவு -	ரூ 5700
(4)	காசுக் கணக்கு -	வரவு -	ரூ 7500
	மின் கட்டணக் கணக்கு -	செலவு -	ரூ 7500

28. "கலைவாணி' அரிசி வணிகத்தின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விற்பனை	இறுதி இருப்பு	உள் வந்த வண்டிக் கூலி
ஆரம்ப இருப்பு	கொள்வனவு	

   விற்பனைக்கு தயாராக இருந்த பொருள் கிரயத்தினுள் அடங்கும் விடயங்களை மட்டும்கொண்ட விடையைத் தெரிவு செய்க.
   1. ஆரம்ப இருப்பு + கொள்வனவு + இறுதியிருப்பு
   2. ஆரம்ப இருப்பு + கொள்வனவு + விற்பனை
   3. ஆரம்ப இருப்பு + இறுதி இருப்பு + கொள்வனவு
   4. ஆரம்ப இருப்பு + கொள்வனவு + உள்வந்த வண்டிக் கூலி

29. பாத்திமா வணிகத்தின் 2024ம் ஆண்டிற்கான மொத்த விற்பனை ரூ 400,000 ஆகும். அதில் 60% கடனடிப்படையினாலாகும். கடன் விற்பனையில் 50% பணம் பெறப்பட்டுள்ளது. மீதி கடன்பட்டோரில் 10% அறவிடமுடியாகக் கடனாகப் பதிவழிக்கப்பட்டது.
31/12/2024 இல் கடன்பட்டோர் மீதியையும், இலாப நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படும் அறவிடமுடியாக் கடன் தொகையும் முறையே கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) ரூ 120 000 மற்றும் ரூ. 12 000 (2) ரூ 108 000 மற்றும் ரூ 12 000
(3) ரூ. 120 000 மற்றும் ரூ 12 000 (4) ரூ 240 000 மற்றும் ரூ 12 000

➢ கீழேதரப்பட்ட தகவல்கள அடிப்படையாகக் கொண்டு வினா இல 30, 31 ற்கு விடையளிக்குக.
வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 200. ஒரு அங்கத்தவருக்கான வருடாந்தக் கட்டணம் ரூபா 100, 2024.12.31ன் இறுதியில் 20 அங்கத்தவர்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தவில்லை.

30. 2024ம் ஆண்டில் பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கில் இடம்பெற வேண்டிய அங்கத்துவக் கட்டணத்தின் பெறுமதி.
(1) ரூபா. 22 000 (2) ரூபா. 2000 (3) ரூபா. 20 000 (4) ரூபா. 18 000

31. 2024.12.31ல் வருட இறுதியில் வருமானக் கூற்றில் காட்டப்படவேண்டிய அங்கத்துவக் கட்டணத்தின் பெறுமதி.
(1) ரூபா. 22 000 (2) ரூபா. 18 000 (3) ரூபா. 20 000 (4) ரூபா. 2 000

➢ பின்வரும் விடயங்களைப் பயன்படுத்தி வினா இல 32 மற்றும் 33 ஆகியவற்றிற்கு விடை தருக
ஆதித்தன் சீமெந்திலான பூச்சாடிகளை உற்பத்தி செய்யும் வணிகத்தை ஆரம்பித்துள்ளார். 2024 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் பின்வருமாறு.
நேர்ப் பொருள் கிரயம் ரூ 90 000
ஏனைய நேர்க் கிரயம் ரூ 30 000
நேரில் கிரயம் ரூ 60 000
ஜனவரி மாதத்தில் 1000 சீமெந்து பூச்சாடிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஒரு பூச்சாடி உற்பத்திக்கான சம்பளமாக ரூ 40 வழங்கப்பட்டது.

32. மேலே தகவல்களின் படி முதன்மைக் கிரயத்தின் பெறுமதி யாது?
(1) ரூ 120 000 (2) ரூ 160 000 (3) ரூ 180 000 (4) ரூ 220 000

33. ஒரு பூச்சாடிக்கான உற்பத்திக் கிரயம் யாது?
(1) ரூ 120 (2) ரூ 160 (3) ரூ 180 (4) ரூ 220

➢ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 34, 35 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
கீழே 31.12.2024 இல் சுமந்திரன் வணிகத்தின் பரீட்சைமீதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் ஆகும்.

பரீட்சைமீதி 31.12.2024 இல் விபரம்	தொகை	தொகை
தளபாடம் தளபாட பெறுமான தேய்வொதுக்கம் (01.01.2024)	80 000	 16 000

செம்மையாக்கல்:-

❖ தளபாடத்திற்கு 10 % பெறுமானத் தேய்வொதுக்கம் செய்க.

34. மேற்படி தகவலின்படி குறித்த நிதியாண்டுக்கான தளபாடத்தேய்வாக இலாப நட்டக்கூற்றில் காட்டப்படும்தொகை,
(1) ரூ 8 000 (2) ரூ 16 000 (3) ரூ 24 000 (4) ரூ 32 000

35. நிதிநிலைமைக் கூற்றில் திரண்ட பெறுமானத்தேய்வு ஓதுக்கமாகக் காட்டப்படும் தொகையாக அமைவது,
(1) ரூ 8 000 (2) ரூ 32 000 (3) ரூ 16 000 (4) ரூ 24 000

➢ கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவலைப் பயன்படுத்தி 36 முதல் 40 வரையிலான கேள்விகளுக்கு விடையளிக்குக.

31.12.2024 இல் ரேகா வணிகத்தின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பெறப்பட்ட சில விபரங்கள் வருமாறு,

	ரூ.
விற்பனை……………………………………………	400,000
கொள்வனவு………………………………………	200,000
2024.01.01 இல் இருப்பு…………………………	15,000
உள்வந்த வண்டிக்கூலி……………………………	5,000
சம்பளம்……………………………………………	25000
காப்புறுதி………………………………………..	10,000
மின் கட்டணம்………………………………..	10,000
விளம்பரம்……………………………………….	15,000
கட்டிடங்கள்………………………………………	350,000
2024.01.01. கட்டிட தேய்மான ஒதுக்கம்…………………	70,000
காசு மீதி ………………………………………….	10,000
கடன்பட்டோர் …………………………………………	25,000

மேலதிக தகவல்,

- கட்டிடங்களுக்கு 10% பெறுமானத் தேய்வு இடப்படல் வேண்டும்.
- 31.12.2024 இல் இறுதி இருப்பு ரூபா.20,000.

36. 31.12.2024 இல் ரேகா வணிகத்தின் இறுதி ஆண்டுக்கான விற்பனைக்கிரயம்,
(1) ரூ. 215 000 (2) ரூ. 220 000 (3) ரூ. 205 000 (4) ரூ. 200 000

37. இந்த வணிகத்தின் 2024.12.31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்,
(1) ரூ. 200 000 (2). ரூ. 195 000 (3) ரூ. 180 000 (4) ரூ. 185 000

38. இவ் வணிகத்தின் 2024.12.31 இல் கட்டிடங்களின் தேறிய பெறுமதி என்ன?
(1) ரூ. 280 000 (2) ரூ. 245 000 (3) ரூ. 315 000 (4) ரூ. 35 000

39. விநியோகச்செலவு மற்றும் நிர்வாகச் செலவுகளின் மொத்த தொகையாக அமைவது

(1)ரூ 15 000, ரூ 80 000 (2) ரூ 15 000, ரூ 75 000
(2) ரூ 80 000, ரூ 15 000 (4) ரூ 45 000, ரூ 50 000

40. 31.12.2024 இல் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி யாது?
(1). ரூ. 300 000 (2) ரூ. 245 000 (3) ரூ. 55 000 (4) ரூ. 20 000

($1 \times 40 = 40$ புள்ளிகள்)

பகுதி II

❖ முதலாம் வினா உட்பட **பகுதி I இருந்து இரண்டு** வினாக்களையும் **பகுதி II இருந்து இரண்டு** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து வினாக்களுக்கு** மாத்திரம் விடை எழுதுக.

01) பின்வரும் சம்பவக் கற்கையை பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வணிகப் பட்டதாரியான ஆகாஸ் அரச வேலைவாய்ப்புக்களை பெறுவதில் நாட்டமின்றி தானே சுயமாக தொழில் செய்யும் நோக்கத்துடன் இலகுவில் உக்கக்கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி அழகிய வடிவமைப்புகளுடன் கூடிய கைப்பைகளை தயாரிக்கும் வணிகமொன்றை தனது சொந்தச் சேமிப்பான ரூ 500 000 இனை மூலதனமாக இட்டு 01.01.2025 இல் 'இயற்கை உற்பத்திகள்' என்னும் பெயரில் ஆரம்பித்திருந்தார். அன்றைய தினமே 12 % வருட வட்டியில் ரூ 200 000 இனை இலங்கை வங்கியிடமிருந்து கடனாகப் பெற்று அப்பணத்தில் கைப்பைகளை தயாரிக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்தார். அரசு பொலித்தீன் பைகளுக்கு கட்டணம் அறவிடும் நடைமுறைகளை கொண்டு வந்தமையால் நாளாந்த பாவனைக்கு நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய கைப்பைகளுக்கு கேள்வி எழுந்தமையினால் ஆகாஸின் வணிகத்தின் உற்பத்தி அதிகரித்து இலாபம் அதிகரித்தது.

31.01.2025 இல் முடிவடைந்த மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு.

மூலப்பொருட்கள் கொள்வனவு காசு ரூ 180 000
மூலப்பொருட்கள் கொள்வனவு கடன் ரூ 100 000
செலுத்திய உள்வந்த வண்டிக்கூலிகள் ரூ 20 000
கடன்கொடுத்தோருக்கு செலுத்தியது ரூ 40 000
செலுத்திய ஊழியர் கூலிகள் ரூ 100 000
செலுத்திய தொலைபேசிக்கட்டணங்கள் ரூ 5000
செலுத்திய விநியோகக் கட்டணங்கள் ரூ 40 000
காசு விற்பனைகள் ரூ 500 000
கடன் விற்பனைகள் ரூ 200 000

ஆகாஸ் தனது உற்பத்திப் பொருட்களுக்கு கொள்விலையில் 20% இலாபம் வைத்து விற்பனை செய்வதுடன், எதிர்காலத்தில் தனது வணிகத்தை கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக மாற்றுவதற்கு தீர்மானித்தார்.

மேலதிக தகவல்கள்

❖ 2025 ஜனவரி மாதத்திற்கான தொலைபேசிக்கட்டணங்களில் ரூ 2000 இதுவரை செலுத்தப்படவில்லை.

❖ நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு வருடாந்தம் 12% நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடல் வேண்டும்.

(i) (அ) இயற்கை உற்பத்திகள் வணிகத்தை உடைமை அடிப்படையில் வகைப்படுத்தி அதற்கு உரித்தான வணிக அமைப்பு வகையைக் குறிப்பிடுக.
(ஆ) இயற்கை உற்பத்திகள் வணிகத்தின் பலம் ஒன்றையும், வாய்ப்பு ஒன்றையும் குறிப்பிடுக.

(ii) (அ) ஆகாஸின் வணிகத்தை பதிவு செய்ய வேண்டுமா? உமது விடைக்கான காரணத்தை தருக.
(ஆ) ஆகாஸ் வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரை சம்பவத்திலிருந்து குறிப்பிடுக.

(iii) (அ) மேற்படி சம்பவத்திலிருந்து பின்வரும் முகாமைத்துவக் கருமங்களுக்கு உதாரணம் தருக.
(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல்
(ஆ) பின்வரும் சந்தைப்படுத்தல் கலவை மாறிகளுக்கு சம்பவத்திலிருந்து உதாரணம் தருக.
(1) உற்பத்திப்பொருள் (2) விலை

(iv) (அ) ஆகாஸ் தற்போது நடாத்தும் வணிக அமைப்பு வகையின் வரையறைகள் இரண்டு தருக.
(ஆ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக மாற்றுவதன் மூலம் ஆகாஸ் அடைந்துகொள்ளக் கூடிய நன்மைகள் இரண்டு தருக.

(v) *01.01.2025* இல் இருந்தவாறு இயற்கை உற்பத்திகள் வணிகத்தின் அடிப்படை கணக்கீட்டுச் சமன்பாட்டை எழுதுக.

(vi) வங்கிக்கடனாக பெற்ற பணத்திலிருந்து இயந்திரம் கொள்வனவு செய்தமைக்கான இரட்டைப் பதிவினைத் தருக.

(vii) (அ) இயற்கை உற்பத்திகள் வணிகத்தினால் பேணப்படவேண்டிய மூலப்பதிவேடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(ஆ) மேலே (vii) (அ) இல் குறிப்பிட்ட மூலப்பதிவு ஏடுகள் ஒவ்வொன்றிலும் பதியப்படும் கொடுக்கல்வாங்கல்கள் ஒவ்வொன்று வீதம் மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையிலிருந்து தருக.

(viii) பின்வரும் கொடுக்கல்வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவுகளை தொகைகளுடன் தருக.

(1) செலுத்தப்படாதுள்ள தொலைபேசிக்கட்டணம்

(2) நடைமுறையல்லாச் சொத்துக்கான பெறுமானத்தேய்வு

(ix) *31.01.2025* இல் இயற்கை உற்பத்தி வணிகத்தின் காசுமீதியைக் கணிப்பிடுக.

(x) (அ) *31.01.2025* இல் உள்ளவாறு இயற்கை உற்பத்திகள் வணிகத்தில் காணப்படும் நடைமுறை பொறுப்புக்கள் இரண்டினை பெறுமதியுடன் தருக.

(ஆ) *31.01.2025* இல் இருந்தவாறு இயற்கை உற்பத்திகள் வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கொண்டுசெல் பெறுமதியைக் கணிப்பிடுக. ($2 \times 10 = 20$ புள்ளிகள்)

பகுதி – *I* வணிகக்கல்வி

(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)

2. (i) அரச கூட்டுத்தாபனங்களின் பண்புகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) அக்கறையுடைய தரப்பினரான வழங்குனர்களின் நோக்கம் நியாயமான சம்பளத்தைப் பெறுவதாகும்.

(ஆ) எரிபொருடகளின் விலை அதிகரித்தல் பொருளாதார சூழலுடன் தொடர்புடயதாகும்.

(இ) அனைத்து சில்லறை வியாபார வணிகங்களும் சேவை வழங்கும் வணிகங்களாகும்.

(ஈ) தற்காலத்தில் வணிகத்தில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவது இலத்திரனியல் ஊடகங்களால் மட்டுமேயாகும். *(02 புள்ளிகள்)*

(iii) செந்தூரி என்பவர் பாடசாலை ஒன்றிற்கருகில் பாடசாலை உபகரணங்களை விற்பனைசெய்யும் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். அவ்வணிகத்திற்கான பாடசாலை உபகரணங்கள் ஜானகி வணிகத்தினால் வழங்கப்படுகின்றது.

(அ) மேற்கூறப்பட்ட சம்பவத்தில் தொடர்புபடும் வணிகச் சூழல் காரணிகள் இரண்டினைத் தருக.

(ஆ) மேற்கூறிய சம்பவத்தில் இனங்காணக் கூடிய உற்பத்திக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) நீண்டகாலமாக இலங்கையில் பொருட்கள் சேவைகளின் விலையானது அகிகரித்துச்செல்லும் போக்கே காணப்படுகின்றது.

(அ) பொதுவிலைமட்டம் அதிகரிப்பதற்கான பொருளாதாரச் சூழல் காரணி எது?

(ஆ) பொருளாதாரச் சூழல் காரணியில் அடங்கும் அன்னியச் செலாவணி மாற்றுவீதம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(08 புள்ளிகள்)

3. (i) சேவைகள் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) பங்குடைமை வணிகமொன்றின் ஆகக் குறைந்த பங்காளர்களின் எண்ணிக்கை இரண்டாகக் காணப்படுவதுடன் உச்ச பங்காளர் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை.

(ஆ) சமூக நல நோக்கம் கொண்ட வணிக அமைப்புக்கள் அரசினால் மாத்திரமே நடாத்தப்படுகின்றன.

(இ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் பங்கு வழங்களினூடாக மூலதனத்தை திரட்டுகின்றன.

(ஈ) உள்ளகத் தொடர்பாடலில் தகவல் அனுப்புவோருக்கும் தகவல் பெறுவோருக்கும் இடையில் இடைவெளி குறைவாகக் காணப்படும். *(02 புள்ளிகள்)*

(iii) பட்டயக் கணக்காளர்களாக பணிபுரியும் மூன்று நண்பர்கள் ஒன்றிணைந்து கணக்கீடு தொடர்பான மென்பொருட்களின் உதவியுடன் கணக்கீட்டு நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றனர்.
(அ) மேற்குறித்த மூன்று நண்பர்களுக்கும் நீங்கள் சிபார்சு செய்யும் சிறந்த வணிக அமைப்பு முறையினைக் குறிப்பிடுக?

(ஆ) மேற்குறித்த அ பகுதியில் குறிப்பிட்ட வணிக அமைப்பில் காணப்படும் சாதகமான ஒரு விடயத்தினையும் பாதகமான ஒரு விடயத்தினையும் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) ஒரு வணிகமானது மொத்த வியாபாரமா அல்லது சில்லறை வியாபாரமா எனத்தீர்மானிக்கப்படுவது கொள்வனவாளரின் நோக்கத்தின் அடிப்படையிலாகும்.
(அ) சில்லறை வியாபாரம் என்றால் என்ன?
(ஆ) மொத்த வியாபாரத்தின் பண்புகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*
(08 புள்ளிகள்)

4. (i) முதலீட்டு வழிமுறையொன்றைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய காரணிகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(ii) *பின்வரும் கூற்றுகள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.*

(அ) மணமகளை அலங்காரம் செய்யும் நிறுவனமொன்று விசேடமானவகை பூக்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கு சிறப்பான போக்குவரத்து சாதனம் விமானம் ஆகும்.
(ஆ) நிலையான வைப்பிற்கான வட்டியை மாதாந்தம் அல்லது முதிர்வின் போதுபெற்றுக்கொள்ளலாம்.
(இ) அடகு வைக்கப்படும் பொருட்களை காப்புறுதி செய்யும் உரிமை அடகுபிடிக்கும் நிறுவனங்களுக்கு உண்டு.
(ஈ) மனித தேவை விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக பொருட்களை உற்பத்தி செய்தல் சந்தைப்படுத்தல் ஆகும்.. *(02 புள்ளிகள்)*

(iii) ராஜா என்பவர் ஓர் வணிகத்தை நடாத்திச் செல்லும் முயற்சியாளராவார். இவர் வணிக வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கு ஒன்றை ஆரம்பித்து காசோலை ஊடாகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றார்.
(அ) காசோலையில் குறுக்குக்கோடிடுதல் என்றால் என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) காசோலையில் குறுக்குக்கோடிடலின் இருவகைளையும் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முதலீடானது பெரும்பங்காற்றுகின்றது
(அ) கம்பனியொன்றினால் வழங்கப்படும் "பங்கு" என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(ஆ) திறைசேரி உண்டியலை கொள்வனவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(08 புள்ளிகள்)

பகுதி *II* கணக்கீடு
(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)

05) i) (a) *கணக்கீடு என்றால் என்ன?*

(b) சொத்துகளின் பண்புகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

ii) பின்வரும் தயவல்களை அவதானிக்குக.

(a) *மூலதனம்*	(e) *மின்கட்டணம்*
(b) *தளபாடம்*	(f) *விற்பனை*
(c) *வங்கிக்கடன்*	(g) *அட்டுறு செலவுகள்*
(d) *இருப்பு*	(h) *நிலையான வைப்பு வட்டி*

வேண்டப்படுவது *:*

மேற்படி கணக்குகளை சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை, வருமானம், செலவினம் எனும் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக. *(02 புள்ளிகள்)*

iii) *பின்வருவன புத்தகசாலை ஒன்றில் இடம்பெற்ற 31.03.2025 இல் முடிவடைந்த மாதத்தில் நிகழ்ந்த சில கொடுக்கல் வாங்கல்களாகும்.*

1. கடனிற்கு கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் ரூபா 30000

2. ரூபா 200 000 பெறுமதியான புத்தகங்கள் ரூபா 35000 இற்கு விற்கப்பட்டது.
3. கடன்கொடுத்தோனுக்கு கொடுத்த காசு ரூபா 10000
4. உரிமையாளரது பற்று ரூபா 1000

வேண்டப்படுவது

மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதனைக் குறிப்பிடுக.

விடையளிப்பதற்கு பின்வரும் சமன்பாட்டினை கருத்தில் கொள்க.

சொத்துக்கள் (ரூபா) = உரிமையாண்மை (ரூபா) + பொறுப்புக்கள் (ரூபா)

(04 புள்ளிகள்)

iv) சங்கீதா வணிகத்தின் 2025 ஏப்பிரல் மாதத்திற்கு சில்லறைக் காசாளருடனான கொடுக்கல் வாங்கல்களடன் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு :

2025.04.01 இல் சில்லறைக் காசாளரிடமிருந்து மீதி ரூபா 500

2025.04.01 இல் நிரப்பல் செய்யப்பட்ட தொகை ரூபா 4500

2025 ஏப்பிரல் மாதத்தில் சில்லறைச் செலவுகளைக்கான கொடுப்பனவுகளின் மொத்தம்

- பிரயாணச் செலவு ரூபா 1300
- தபால் செலவு ரூபா 1000
- எழுதுபொருள் செலவு ரூபா 750
- ஏனைய செலவு ரூபா 1250

சில்லறை செலவுகளுக்கான மீள்நிரப்பலை ஒவ்வொரு தொடக்க நாளில் நிரப்பப்படும்.

வேண்டப்படுவது :

1. 2025 மார்ச் மாதத்தில் சில்லறைக் காசாளாரால் மேற்கொள்ளப்பட்ட மொத்த கொடுப்பனவுகளின் பெறுமதி
2. 2025 ஏப்பரல் மாதத்தில் இடம் பெற்ற தபால் செலவு எவ்வாறு பேரேட்டில் பதிவு செய்யப்படும் என்பதனை குறிப்பதற்கு பேரேட்டு கணக்கினை தயாரிக்க.
3. 2025 ஏப்பரல் 30 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த மீதி
4. இவ்வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி யாது? (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

06) i) (a) வங்கி கூற்று என்றால் என்ன?

(b) வங்கிக் கூற்று ஒன்றின் வரவு நிரலில் காணப்படும் ஏதேனும் இரு உருப்படிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) ரமணன் வணிகத்தின் 2025 ஏப்பரல் மாதத்திற்கான கடன் கொள்வனவுகள் தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறு

திகதி	பட்டியல் இலக்கம்	வழங்குனர் பெயர்	விபரம்	ஏனைய தகவல்கள்
2025.04.10	A - 10	ராதா	ஒவ்வொன்றும் ரூபா 400 வீதம் 100 சேர்ட்கள்	வியாபாரக்கழிவு 10%
2025.04.20	B - 05	ராதிகா	ஒவ்வொன்றும் ரூபா 500 வீதம் 20 சேர்ட்	–

வேண்டப்படுவது :

2025 ஏப்பிரல் மாதத்திற்கான ரமணன் வணிகத்தின் கொள்வனவு நாட்குறிப்பேடு

(02 புள்ளிகள்)

iii) சுகன்யா வணிகத்தின் 31.10.2025 இல் இருந்தவாறான வங்கிக் கணக்கு வரவு மீதி ரூபா 20 000 ஆகும். அத்தினத்தில் பெறப்பட்ட வங்கிக் கூற்றின் மீதியானது வங்கிக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. பின்னர் பின்வரும் காரணங்கள் கண்டு பிடிக்கப்பட்டது.

1. வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாத நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 5000
2. மாதத்தில் வைப்புச் செய்யப்பட்ட போதும் தேறாத காசோலை ரூபா 6000
3. மாதத்தில் வழங்கப்பட்டு இதுவரை வங்கியில் சமர்பிக்கப்படாத காசோலை ரூபா 3000
4. வங்கியினால் நேரடியாகப் கடன்பட்டோனிடம் பெறப்பட்ட தொகை ரூபா 1000 வங்கிக் கணக்கில் பதிவு இடம்பெறவில்லை.

தேவைப்படுவது :

(a) 31.10.2025 இல் இருந்தவாறு வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியை செம்மையாக்குதல்.

(b) 31.10.2025 இல் இருந்தவாறு வங்கி கணக்கிணக்கக் கூற்று *(04 புள்ளிகள்)*

iv) சுதா வணிகத்தின் 2025.10.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் செலவுப் பக்கம் ரூபா 1000 குறைவாகக் காணப்பட்டது. கணக்காய்வின் போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

- மின்சாரக்கட்டணக் கொடுப்பனவு ரூபா 1000 மின்சாரக் கட்டணக் கணக்கில் இரு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ரூபா 2000 இற்கான விற்பனைப் பட்டியல் அம்சம் ஒன்று கணக்கு புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது :

(a) மேற்குறித்த வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு.

(b) தொங்கல் கணக்கு *(04 புள்ளிகள்)*

(மொத்தம் 12 புள்ளிகள்)

07) i) கலைமகள் சனசமூக நிலையத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

காசு மீதி	10000	காகிதாதிகள்	4000
அங்கத்துவ கட்டணம்	50000	போக்குவரத்துச் செலவுகள்	6000
நன்கொடை	3000	விழாச் செலவுகள்	1000
அரச மானியம்	2000	மின்கட்டணம்	2000
		மீ/செ	52000
	65000		**65000**

மேலதிக தகவல்கள்:

- அங்கதவர்கள் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவ கட்டணம் ரூபா 2000. 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கு 10 அங்கத்தவர்கள் அங்கத்துவ கட்டணத்தினை செலுத்தவில்லை.

- 31.12.2024 இல் இருந்தவாறு சென்மதியாகக் காணப்படும் போக்குவரத்துச் செலவு ரூ 1000

  வேண்டப்படுவது :

  - 31.12.2024 இல் முஎவடைந்த வருடத்திற்கான கலைமகள் சனசமூக நிலையத்தின் வருமானக் கூற்று *(04 புள்ளிகள்)*

ii) பின்வருன 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான சுமதி வணிகத்தின் பரீட்சை மீதி ஆகும்.

	வரவு (ரூ)	செலவு(ரூ)
காணிகட்டடம் (கிரயம்)	200 000	
விநியோக வான் (கிரயம்)	300 000	
01.01.2024 இல் விநியோகவான் திரண்ட தேய்வு		60 000
கொள்வனவு	200 000	
விற்பனை		340 000
2024.01.01 இல் இருப்பு	60 000	
பெற்ற கழிவு		5000
கொடுத்த கழிவு	3000	
8% வங்கிக்கடன்		100 000
வங்கிக் கடன்வட்டி	5000	
உட்சுமைக் கூலி	5000	
மின்கட்டணம்	2000	
அறவிடமுடியாக் கடன்	2000	
கடன்பட்டோன்	71 000	
கடன்கொடுத்தோன்		40 000
நிர்வாக ஊழியர் சம்பளம்	27 000	
காசு மீதி	40 000	
மூலதனம் 2024.01.01 இல்		370 000
	915 000	915 000

மேலதிகத் தகவல்கள் :

1. 2024.12.31 இல் உள்ளவாறான சரக்கிருப்பு ரூபா 50 000
2. விநியோக வான் வருடாந்தம் நேர் கோட்டு முறையில் 10% தேய்வுறும்.
3. வியாபாரக் கடன்பட்டோரில் ரூ 2000 இனை அறவிடமுடியாக் கடனாக பதிவளிக்கத் திர்மானிக்கப்பட்டது.

   வேண்டப்படுவது :

   (a) 2024.12.31 இல் முடிவடைந்து வருடத்திற்கான இலாப நட்டக் கூற்று *(04 புள்ளிகள்)*

   (b) 2024.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று *(04 புள்ளிகள்)*

(மொத்தம் 12 புள்ளிகள்)